முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி
O.S.No.382/2023

2024 வது ஆண்டு டிசம்பர் மாதம் 09 ம் நாள் வா.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.பரிசுத்தம் | வட்டம் | சென்னை |
| த.பெ | திரு.சவரிமுத்து | கிராமம் | ஆதம்பாக்கம் |
| வயது | 72 | மதம் | |

09.12.2024 முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் வாதிகளின் பொது அதிகாரம் பெற்ற முகவர் ஆவேன். இந்த வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 06.12.1961 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகும். 13.08.1945 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் கணினி சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகும். 22.12.2008 தேதியிட்ட விடுதலை ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆகும். பட்டா எண்.1075 அசல் வா.சா.ஆ.4 ஆகும். 22.12.2008 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆகும். நான் 12.07.2023 அன்று பெருமாள்புரம் காவல்நிலையத்தில் அளித்த புகாரின் கையிருப்பு நகல் வா.சா.ஆ.6 ஆகும்.

(மேலும் ஆவணங்களை குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)